**செய்தி வெளியீடு எண்: 034** **நாள்: 10.01.2018**

**செய்தி வெளியீடு**

18.12.2017 அன்று நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ், சென்னை பதிப்பில் **"குடிபோதையில் இருந்த ஒரு நபர் தன்னுடைய ஆடி கார் என நினைத்து ஆம்புலன்சை ஓட்டிச் சென்றார்"** என்ற தலைப்பில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது.

எஃப் 3 நுங்கம்பாக்கம் போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் புலனாய்வு செய்ததில் இந்த அடையாளம் தெரியாத நபரை கண்டறிந்து அவரது ஓட்டுநர் உரிமைத்தை தற்காலிக தடை செய்யும் பொருட்டு சென்னை (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு கருத்துரு ஒன்றினை அனுப்பியுள்ளார். சென்னை (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் உரிய விதிமுறைகளை பின்பற்றி அவரது ஓட்டுநர் உரிமத்தை 18.12.2017 முதல் 17.06.2018 முடிய உள்ள ஆறு மாத காலத்திற்கு தற்காலிக தடை செய்து உத்தரவு பிறப்பித்தார். தமிழ் நாட்டில் சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிர் இழப்புகளை குறைக்கும் பொருட்டு போக்குவரத்து துறை பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே அனைத்து சாலை உபயோகிப்பாளர்களும் சாலையை பாதுகாப்பாக மாற்றிட ஏதுவாக சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிர் இழப்புகளை குறைக்கும் அரசின் நோக்கத்திற்கு உதவிட வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**